# அறிமுகம் காணவிருக்கும் ‘சுகாதார தகவல் மசோதா’

இளவரசி ஸ்டீஃபன்

நோயாளிகள் பராமரிப்பையும் தரவுப்பகிர்வையும் மேம்படுத்தும் இலக்குடன் ‘சுகாதார தகவல் மசோதா’ அறிமுகம் செய்யப்படவுள்ளதாக சுகாதார அமைச்சர் ஓங் யி காங் தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகத்தில் சனிக்கிழமை (நவம்பர் 9) நடைபெற்ற சிங்கப்பூர் மக்கள்தொகை சுகாதார ஆய்வுகள் குழுவின் இருபதாவது ஆண்டு விழாவில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று உரையாற்றியபோது திரு ஓங் இதனைத் தெரிவித்தார்.

தீவிரப் பராமரிப்புச் சேவையைப் பொறுத்தமட்டில், மருத்துவமனை சார்ந்த 90 விழுக்காட்டுப் பணிச்சுமைகளைக் கையாளும் அரசு மருத்துவமனைகள் தேசிய சுகாதார மின்பதிவுகளுக்கு (NEHR) பங்களித்து வருவதாகவும், எஞ்சிய 10 விழுக்காட்டினைக் கையாளும் தனியார் மருத்துவமனைகள் இன்னும் அதில் இணையவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

“தற்போதைய ‘ஹெல்தியர் எஸ்ஜி’ திட்டத்தின்கீழ் பலதுறை மருந்தகங்கள், தனியார் மருந்தகங்கள் உட்பட 70 விழுக்காட்டு தொடக்கநிலைப் பராமரிப்பு வழங்குநர்கள் ஏற்கனவே ‘என்இஎச்ஆர்’க்கு பங்களித்து வருகின்றனர்.

“சுகாதார தகவல் மசோதா என்று குறிப்பிடப்படும் அப்புதிய சட்டம், சுகாதாரப் பராமரிப்புச் சேவைகளை வழங்கும் தனியார் மருத்துவமனைகள் அனைத்தும் சுகாதார மின்பதிவுகளைத் தாக்கல் செய்வதைக் கட்டாயமாக்கும்,” என்றார் திரு ஓங்.

அச்சட்டத்தை அடுத்த ஆண்டு அமல்படுத்தப்படலாம் என எதிர்பார்ப்பதாகக் கூறிய திரு ஓங், “இதன் தொடர்பில் அண்மையில் அனைத்து தனியார் மருத்துவமனைகளுடன் கலந்து ஆலோசித்தோம். தேசிய சுகாதார மின்பதிவுகளுக்குப் பங்களிக்க அவர்கள் அனைவரும் ஆதரவு தெரிவித்தனர்,” என்றும் சொன்னார்.

தேசிய சுகாதார மின்பதிவுகளை விரிவாக்கம் செய்தும் மேம்படுத்தியும் வருவதாக கூறிய அவர், சுகாதாரச் சேவை வழங்கும் அனைவரும் அணுகவல்ல அந்தப் பொதுத்தளம், தரவுப்பகிர்வு மூலம் நோயாளிகளுக்கு ஆற்றல்மிகு சேவை வழங்க மிகவும் பயனுள்ளதாகத் திகழும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.



சிங்கப்பூர் மக்கள்தொகை சுகாதார ஆய்வுகள் குழுவின் இருபதாவது ஆண்டு விழாவில் பங்கேற்பாளர்களுடன் ‘தம்படம்’ எடுத்துக்கொண்டார் சுகாதார அமைச்சர் ஓங் யி காங். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

mrasi@sph.com.sg